புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பெண் படைப்புகளில் மகளிர் பதிவுகள்

*முனைவர் ஆர். நிர்மலா தேவி*
*இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்*
*தமிழ்த்துறை வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு - 638 012*

*ஆய்வுச்சுருக்கம்*

*அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது, அதிலும் பெண்ணாய் பிறப்பது மிகப் பெரிய பேறு. இன்றைய நவீன மயமாக்கித்தில் சமூக கட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் பெண்களின் சமூக இருப்பு, சமூக அந்தஸ்து, பங்களிப்புகள் பற்றிய புதிய சிந்தனைகளைப் பெண் கவிஞர்கள் பார்வையில் அமைந்துள்ள பாங்கினை எடுத்துரைத்தல் தங்கள் பெருமை குலைந்து சமுதாயத்தில் பாவப் பிறவிகளாக வலம் வருவதை பெண்கவிஞர்கள் எடுத்துரைத்தலும் அத்ற்கான தீர்வுகளையும் காணுதல்*

*பெண் என்பவள் ஆண்களுக்குத் துணையாக, அம்மாவாக, மனைவியாக, சகோதரியாக, தோழியாக, மகளாக வாழ்நாள் முழுவதும் ஆணின் இன்ப, துன்பங்களைப் பகிர்ந்து வாழ்பவள். பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக இலக்கணம் கொண்ட பெண் என்பவள் நற்றாயாய், செவிலித்தாயாய், தலைவியாய், தோழியாய் மகளாய் பல பரிணாமங்களில் உலா வந்து, இல்லறத்தை நல்லறமாக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தாலும், ஏதோ ஒரு விலங்கு அவள் கைகளைப் பிணைத்திருக்கிறது. இயக்குபவர் இன்றி எந்த ஒரு எந்திரமும் இயங்காது. அவ்வாறு இருக்கும் போது வாழ்க்கைச் சக்கரம் மட்டும் சுற்றுமா? வாழ்க்கைச் சக்கரம் சுழல இயங்கும் சக்தியாக, 'சக்தி இல்லையெனில் சிவனில்லை'' என்று சொல்ல கூடிய வகையில் பெண் இருக்கிறாள் பெண் கடவுளாய், மலர்களாய், இயற்ங்கையாய் , அன்பாய், அகமாய், புறம்பாய், தெய்வமாய் பல வடிவங்களில் தொடர் வண்டி போல் அடுக்கிக் கூறினாலும் ஆதி கால மகாபாரதத்தில் முதல் எதிர்ப்புக் குரல் கொடுத்தவள் அம்பை. தான் விரும்பிய ஆணை நாயகனாக அடையாமல் பலவந்தமாகப் பிடித்து வந்து வாழ்வே இல்லாமல் துன்பம் இழைத்த பீஷ்மனைக் கொன்று பழி தீர்த்துக் கொள்ள சூளுரைக்கச் செய்தது திரௌபதியை. நாயகர் தாந்தம்மைத் தோற்றபின், என்னை நல்கும் உரிமை அவர்க்கில்லை என்று கூற வைத்தது.*

*'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டும் அறிவினில் ஆணுங்கிங்கே பெண்*
*இளைப்பில்லை காண்'*

*என்று பாரதியைக் கனவு காண வைத்தது.*

*பெண்களின் நிலை:*

*'அடிமையிலும் அடிமை என மகளிர் வாழ்க்கை*
*அமைந்திருந்த சின்னங்கள் அழிந்த தில்லை*
*படிமைகளாய், நுகர்பொருளால், ஆண்கள்வாழ்வில்*
*பகடைகளாய் வாழ்வதெல்லாம் பழமை அன்று'*

*பெண்கள் ஆதி காலம் தொடங்கி இன்று வரை கருத்துச் சுதந்திரத்தை இழந்து தனக்கான அடையாளங்களைத் தொலைத்தபடி தான், இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கவிஞர் மேத்தா அவர்கள்தன் கவிதையில் விலாசம் தேடும் விட்டில் பூச்சிகளாய் தொலைந்த போன நினைவுகளின் தடங்களாய் தன்னுடைய பாதையில் தன்னுடைய பயணங்களில் அண்மையிலும், சேய்மையிலும் பயணிக்கும் நிலை இன்றும் தொடர்கிறது என்கிறார் கவிஞர் மேத்தா.*

*மரபென்பார் : முன்னோர்கள் வகுத்துத் தந்த*
*வழியென்பார்: கண்மூடி வழக்கம் கோடி*
*தரமெதுவும் அறியாது தோளில் ஏற்றித்*
*தாங்குவதற் கேற்ற சுமைதாங்கி*

*பெற்ற பிள்ளைகளுக்காய் காத்திருக்கும் தாய், என்றாவது ஓர் நாள் தன்னுடைய வார்த்தைகளுக்குச் செவிமடுக்கமாட்டானா நம் கணவன் என ஏங்கும் மனைவி, உரிய நேரத்தில் கட்டாயம் உதவுவான் உடன் பிறந்தவன் என்று ஏமாறிப் பழகியே வாழ்ந்து வரும் சகோதரிகள் சுதந்திரந்நிற்காக ஏங்கும் மகள்கள் என எல்லா நிலைகளிலும் பெண்களின் இயலாமை நிலைகளைக் கவிஞர்கள் சுட்டியுள்ளனர்.*

*முதல் தேதி என்னும் கவிதையில் மகனுக்காய் காத்திருக்கும் ஒரு தாய் அவலத்தினை மேத்தா அவர்கள்*

*'மணியார்டர் பாரத்தில்*
*நான் எழுதப் போகும்*
*தொகையை*
*உற்றுப் பார்க்கின்றன*
*தொலை தூரத்து*
*கிராமத்தில்*
*ஒரு தாயின் தளர்ந்த விழிகள்'*

*என வெளிப்படுத்துகிறார். இந்த குடும்பம் என்ற சமூக அமைப்பிற்குள் பெண் சமூகப் பாலமாக விளங்கினாலும், அடிமையாக, அதாவது ஒவ்வொரு காலக் கட்டத்திலும் ஒருவரைச் சார்ந்து வாழ வேண்டிய அவலநிலையினைக் கருவறை வாசனை என்ற கவிதையில் படம்பிடித்து காட்டுகிறார் கனிமொழி.*

*'சட்டாம் பிள்ளையாய்*
*அம்மா*
*சிறைக்காவலராய்*
*அப்பா*
*சிறைச்சாலைக்குப்*
*படிப்பு*
*கைகொட்டிச் சிரித்து அடக்கி வைத்த*
*சுற்றம்*
*சிலுவையில் ஆணிதகர்ந்து இறங்கி வந்தால்*
*கையில் தாலிக் கயிற்றோடு*
*கணவன்*
*உன் கருவறைக்குள் மற்றொருமொரு*
*அடிமை"(க.வா. பக்கம் 15)*

*குடும்ப வன்முறைகளால் பெண்கள் கொல்லப்படுவதை இளம்பிறை அவர்கள்*

*'பாரதிதாசன்*
*பெண்களைக்*
*குடும்ப விளக்கென்று*
*சொன்னாலும்*
*சொன்னார்;*
*நம்மவர்கள்*
*எண்ணெய் ஊற்றி*
*எரித்தே விடுகிறார்கள்'*

*எனச் சாடுகிறார்.. பெண் என்பவள், தனக்கென தனிப்பட்ட வீர்பு, வெறுப்புகளும் உணர்ச்சிகளும்கொண்டுள்ள ஒரு மனிதபிறவி என்ற புரிதலும் , சுயமுள்ள ஓர் உயிராக அவள் சுதந்திரம் கொள்ள வேண்டுமென்ற தாகமும் பெண் கவிஞர்களால் முன் வைக்கப்படும் கருத்து. கவிஞர் வத்சலா அவர்கள்*

*எனக்குள்ளேயா இந்த சக்தி*
*என் மனத்திலா இவ்வானந்தம்*

*எனக்கா இத்தனை பயமின்மை*
*என் கால்களைா ஊன்றிக்கொண்டன?*
*எனக்கா இந்த சிறகுகள்*
*தயங்கித் தயங்கி உயிர் வாழ்ந்த நான்*
*எப்பொழுது என்னை உயிர்பித்துக் கொண்டேன், (வத்சலா, சுயம் ப.74)*

*இன்று கணவன், மனைவி இருவரும் பொருள்தேடி வேலைக்குச் செல்லும் நிலை கட்டாயமாகிவிட்டது. இந்நிலையில் பெரும்பாலான குடும்பங்களில், வீட்டில் உள்ள வேலைகள், கணவனுக்குப் பணிவிடை என்பன கூடுதல் சுமையாகப் பெண்களுக்கு மாறிவிட்ட நிலையினைக் காணமுடிகிறது. அலுவலகப் பணியின் களைப்பு ஒருபுறம், வீட்டிலோ...*

*‘பல்லாயிரம் பட்டாம் பூச்சிகள்*
*மூடிய விழிகளில்*
*கண்களைத் தழுவாத உறக்கத்தின் முனகல்*
*வெயில் கால மண்புழுவாய்*
*நெளியும் மேனி*
*காலையில் கட்ட சேலை*
*மேலாளருக்குச் சொல்ல*
*கொஞ்சம் பொய்*
*… … … … … … … ..*
*ஈரத்துணியாய் கனத்த இமைகள்*
*சுமைகள் தாண்டி உறங்கும் நேரம்*
*முடிந்தே விட்டது*
*மொத்த இரவும்’*

*என்னும் வரிகளில் கவிஞர் ஆதிரா முல்லை அவர்கள் பொருளாதார வேட்கைக்குப் பலியாகும் பெண்களின் வேதனைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார். இல்லற வாழ்க்கையைப் பொருளாதாரம் தான் கட்டமைத்திருக்கின்றது. பொருள் சார்ந்த வாழ்க்கையில் ஆசைகளையும், பாசங்களையும் மனதுக்குள் போட்டுப் புதைத்துவிட்டுக் கடமைகளை நோக்கி ஓட வேண்டியநிலை ஏற்படுகிறது. படித்துப் பட்டம் பெற்றுத் திருமண வாழ்வில் இருக்கின்ற பெண், குழந்தை பெற்ற பின் குழந்தையைக் கவனிக்கக்கூட இயலாமல் அலுவலகப் பணியில் மூழ்க வேண்டிய நிலையில், தாய்மை உணர்வையும் தள்ளி வைக்கக்கூடிய நிலையினை நம் கண் முன் நிறுத்துகிறார் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள்.*

*உன் வாயை*
*மார்பில் பொருத்தவும்*
*நேரமில்லாமல்*
*உத்தியோக வேகம்*
*முதலாம் நாளே*
*தாய்ப்பால் மறுத்தேன்*
*முப்பதாம் நாளே*
*உன் அருகாமை தொலைத்தேன்*
*தட்டச்சு செய்தால்தான்*
*வாழ்க்கை தட்டாது*
*தாய்பாலுக்கு ஏங்கியே*
*குழந்தை இறந்தால்?*
*பரவாயில்லை*
*இன்னொன்று பெற்றுக் கொள்வேன்*
*பெறமுடியாதது வேலை தான் ( சுயம் பேசும் கிளி பக் - 18-19)*

*தாய்மையையே கேள்விக்குறி ஆக்கும் பெண்ணின் பரிதாப நிலை. ஆகவே பெண்கள் சுயம் மிக்கவர்களாக, தங்களின் பாதையையும் பயணத்தையும் தாமே தேர்ந்தெடுக்கும் திறம் மிக்கவர்களாக மாறவேண்டும் என்ற குரலை*

*21- ஆம் நூற்றாண்டின்*
*சூரியப் பெண்களுக்கு*
*நிலவு முகம் தேவையில்லை*
*இந்தச் சத்தியப் பிரகடனம் தானே சக்தி.*
*நம் மனசை, சமூகத்தின் மனசை*
*பிளாஸ்டிக் சர்ஜரி செய்து*
*புதிய பெண்முகம் படைக்கும்*
*ஆயத எழுத்துதானே சக்தி (சூரியனை விடிய வைப்போம் பக். 23)*

*பெண்களின் குரலாக ஒலிக்கிறார் ஆண்டாள்பிரியதர்ஷினி.*

*இதற்கான தீர்வு:*

*பெண்ணின் மனதில் தன்னம்பிக்கையினை ஊட்ட வேண்டும். சுயம் நலம் தொலைத்தப் பெண், தன்னை உயர்த்தி, தன் திறமையை நிலைநாட்டி தான் எதிர் கொள்ளும் தடைகள் அனைத்தையும் தகத்தெறிந்து முன்னேற தன்னம்பிக்கை நீரினை ஊற்றி தன்னை உரமேற்றிக் கொள்ளவேண்டும் என்ற உயிரின் பிரவாஹம் கவிதையில் கவிஞர் ராணி துயரம் கண்டு துயரப்படாதே என்று முழங்குகிறார்..*

*'வாழ்வுக்காக நீ*
*போராடுகையில்*
*சரிவு வந்தால்*
*சலித்துப் போகாதே*
*வீழ்ந்து போகாமல்*
*தாழ்ந்து நிற்காமல்*
*நிமிர்ந்து கொள்*
*இனி*
*உதயங்கள் மட்டுமே*
*உன் யாத்திரையில் !'*

*புன்னகைக்குத் திரை போடதே, புன்னகையைத் திரையாய்ப் போட்டுப்பார் அப்பொழுது உன் வேதனைகள் வேள்வியாய் மாறும், சோகம் கூட உனக்குச் சாதகமாகும். ஆணாதிக்க அடக்குமுறையில் அமைதியாய் இருந்து அவதிப்பட்டது போதும்,*

*'வாளாதிருந்தது போதும்*
*நாம் வாளாய் இருப்பதே நியாயம்'*

*என்று உரிமைக் கொடுப்பதன் மூலம் பாரதிதாசனின் தமிழச்சியின் கத்தியாய் தன்னை உணர்த்துகிறார்கள் இன்றைய மகளிர் எனக் குரல் கொடுக்கிறார் அடுப்பு வெளிச்சத்தில் .. கவிதையில் கவிஞர் பத்மாவதி தாயுமானவர்.*

*தன்னம்பிக்கையினை அடைய பெண் கல்வி அவசியம். பெண்டீருக்குப் படிப்பிருந்தால் பண்பாடு வளரும். பெற்ற பிள்ளைகளும் நல்லொழுக்க நெறியில் செல்லும். பெண் கலவியால் உண்டாகும் நன்மையினைக் கவிஞர் வாலி அவர்கள் எடுத்தியம்புகிறார்.*

*'நுண்ணறிவை- பெண்ணுக்கு*
*நூல் கொடுக்கும் - அவள்*
*காலமெல்லாம்*
*நிற்பதற்குக்*
*கால் கொடுக்கும்*
*பந்தக் கால்*
*பாதியில் விட்டாலும்*
*சொந்தக்கால் சோறு போடும்'*

*பெண்களை மென்மையாக வளர்ப்பது இனி வேலைக்காகது. உண்மை உலகத்தின் தோற்றத்தையும் கயவர்களை அடையாளம் காணவும் கற்றுத்தாருங்கள் என்கிறார் கவிஞர் வெண்ணிலா பாலச்சந்திரன்.*

‘இது நந்தவன தோட்டமல்ல
மனித மிருகங்களின் காடு
புடவை கட்ட மட்டும்
கற்றுத் தராதீர்கள்
கண்களால் துகிலுரிக்கும்
துரியோதனர்களின்
கண்களைக் கட்டவும்
கற்றுத் தாருங்கள்’’

பெண்கள் புடவையில் நகையில், தொலைக்காட்சியில் திருப்திப்பட்டு போகும் பெண்ணுக்குள் அவளது நிலையை உணர்த்த வேண்டியது அவசியம். இதை அவளுக்குப் புரிய வைக்கிறார் கவிஞர் பொன்மணி வைரமுத்து.

தன்னைத் தான் விலங்கிட்டு
ஆழிகின்ற
உன்னைத்தான் உலகம்
பேதை என்று சொல்லி
உதட்டுக்குள் சிரிக்கிறது
ஒதுங்காதே
தட்டிக்கேள்
அதற்குன்னைத்
தகுதிப்படுத்திக் கேள்

என்கிறார். பெண் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆணினத்தை எதிர்த்து மட்டுமல்ல, தன்னினத்தை ஒன்றிணைத்துச் சாதனைகளைத் தொடர்ந்து நிகழ்த்திவரும் இன்றைய மகளிர் இனம் சமூகத்திற்கும் ஒரு கேள்வி எழுப்புகிறது. பெண்ணின் சிந்தனை, அறிவாற்றல், படைப்பாற்றல், அரசியல் மதிநுட்பம், ஆளுமை, போன்றவற்றை இடஒதுக்கீடு தர மறுக்கும் சமூகத்தின் மேல்

சிதறினாலும் சிதறல்களும்
கோள்களாகி
வீழ்ந்தும் மீண்டும்
பிய்ந்த சதைகள் ஒட்டி
தழும்பு மறைத்துத்திரியும்
வாழும் கல்பனாக்களுக்கு
தேலையில்லை
அங்கீகாரம் தரத்தயாரில்லாத
உங்கள் அஞ்சலிகள்’’

என்று கோபக்கணைத் தொடுக்கிறார் எட்டாவது பிறவி கவிதையில் கவிஞர் திலகபாமா. இக்கவிதை வரிகள் துணிவு, கொண்ட பெண்ணினத்தின் ஆவணமாகத் திகழ்கின்றது எனலாம்.

பெண்கள் தங்களின் சமுதாய வாழ்க்கையில் சந்திக்கும் இடர்பாடுகளையும் சூழலுக்கேற்ப சமூகத்தை எதிர் கொள்ளவதில் உள்ள சிரமங்களையும் தம் கவிதைகளில் பெண்ணிய கவிஞர்கள் தம் படைப்புகளில் உயிரோட்டமாக சித்தரித்துள்ளார்கள். பெண்களின் அடிமைத்தனத்திற்கு வழி வகுத்திருக்கும் சமூகக்கட்டுகளையும் அவற்றிலிருந்து வெளிவரத்துடிக்கும் பெண்களின் மனநிலையும் ஆணாதிக்கத்தை விடுத்து பெண்கள் இணைந்து தங்களுக்குத் தாமே புதிய சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ளும் வேட்கையும் கவிதைகளுக்குள் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதை உணர்ந்து விழிப்புணர்வு கொண்டு பெண்களே! தலை நிமிர்ந்து வீறு நடை போடலாம். திறவு சொல் – பெண்கள், கனிமொழி, சுகிர்தராணி


பார்வை நூல்கள்

1. அகத்திணை – கனிமொழி, வ.உ.சி நூலகம்
2. சுகிர்தராணி கவிதைகள் – சுகிர்தராணி, காலச்சுவடு பதிப்பகம்
3. ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு.மேத்தா, கவிதா வெளியீடு


********* ********* ********** ********* ********* ********** ********** **********